

2020 ஆம் ஆண்டு குடியுரிமை திருத்த சட்ட மசோதாவுக்கு எதிராக கும்பகோணம் பகுதியில் அப்போதைய மாவட்டச் செயலாளரும், தற்போதைய மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சி.பி.ஐ.எம். மாவட்டச் செயலாளர் சின்னை பாண்டியன், வி.சி.க. தமிழருவி, மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி நிர்வாகிகள் முகமது இப்ராஹிம், சல்லி நசீர், சிக்கந்தர் அலி உள்ளிட்டோர் மீது கும்பகோணம் கிழக்கு காவல் துறை வழக்குப் பதிவு செய்து மேற்படி வழக்கு தஞ்சாவூர் எம்.பி. எம்.எல்.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி கனிமொழி அவர்கள் வழக்கை விசாரணை செய்து அனைவரையும் விடுதலை செய்தார். இவ்வழக்கில் வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், பா.விஜயகுமார், ஆர்.அன்பழகன் ஆகியோர் ஆஜர் ஆனார்கள். சு.கல்யாணசுந்தரம் எம்.பி. மீது அ.தி.மு.க. ஆட்சியில் தொடரப்பட்ட 26 பொய் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சினிவாசன் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீரபாண்டியன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி. என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சான்டர் மற்றும் பலர் உள்ளனர்.

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!

## நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், மே 21 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் நடந்து முடிந்த தேர்தலி போது தேர்தலில் பணியாற்றிய அனைத்து மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்தார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், பரமத்தி வேலூர், குமாரபாளையம் மற்றும் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியில் ஈடுபட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், தேர்தலில் ஆதரவு அளித்த வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன. இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நகர மற்றும் பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

# வாக்காளர்களுக்கு அன்பில் மகேஸ் பொய்யாமொழி நன்றி!

திருச்சி , மே 21 -

திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராகப் போட்டியிட்டவர், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், தேர்



தலில் தனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத திருவெறும்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

தொகுதியின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்

துவாக்குடி நகராட்சிக்கு உட்பட்ட பின்வரும் இடங்களில் வீதி வீதியாகச் சென்று நன்றி தெரிவித்தார்:

பெல்நகர், இந்திராநகர், கலைஞர் தெரு, அன்னை இந்திராநகர், செடிமலை முருகன் கோயில், அண்ணா வளைவு, எழில் நகர், வ.உ. சி. நகர், இன்னும் பல்வேறு பகுதிகளில் நன்றியை தெரிவித்துக் கொண்டார் .

இந்நிகழ்வில் திருச்சி நகரக் கழகச் செயலாளர்

காயாம்பு மற்றும் நகரக் கழக நிர்வாகிகள்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் எனப் பெருந்திரளானோர் இந்த நன்றி அறிவிப்புப் பயணத்தில் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும்

# ஜூன் 3ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

மயிலாடுதுறை, மே 21 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை விஜய் திருமண மஹால் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் கே. ஜி.சினிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீரபாண்டியன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சான்டர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் குறித்துமயி லாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் மங்கை எம். சங்கர், செல்ல.சேதுகுமார், மூவலூர் எம்.மூர்த்தி, என். இளையபெருமாள், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பஞ்சு. குமார், பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ. ஆர்.ராஜா, வைத்தியநாதன், ஞான. இமையநாதன், பி.முருகமணி, சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம். அன்புச்செழியன், எஸ். கே.முத்துராஜா, அண்ணாதுரை. பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ. வின்சென்ட், பி. சிவதாஸ், ஹர்ஷத், வைத்தீஸ் வரன் கோயில் எஸ்.சுவாமி நாதன், எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், பி.கென்னடி அ.காந்தி, சுபாநெடுஞ் செழியன், வழக்கறிஞர் அணி இராம.சேயோன், சீர்காழி நகர மன்ற தலைவர் துர்காபர மேஸ்வரிராஜசேகர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே. மருது, இரா. முருகன், எம்.எஸ்.முத்துகுபேரன், க.அறிவிச்செல்வன் வி.எஸ்.என்.செந்தில், காளி.தேசப்பன், இரா. முருகப்பா, ஆர்.சாந்தி, வி.எஸ்.பிரபாகரன், ஆர். மனோகரன், தீபாசத்தியேந்திரன், ஆர்.செல்வராஜ், மாவைத்தியநாதன், கே.விக்னேஷ், டி.ராஜ்குமார், பெரு.வீரமணி, ஆர். எஸ்.ஸ்ரீதர், வெடி எஸ். பாலமுருகன், எஸ்.எம்.சம்சுதீன்மற்றும் சார்பானிகளின் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் முடிவில் மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் திராவிட முன்னேற்ற கழகம் சந்தித்த பல்வேறு தேர்தலில் வெற்றியையும் தோல்வியையும் சமமாக கருதி மக்கள் பணிகளையும், கழகப் பணியிலும் தொடர்ந்து தொய்வின்றி பணியாற்றி வரும் நிலையில் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்துள்ள நிலையில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பின்னால் கழகம் என்றென்றும் நிற்கும் என்பதை கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு தெரிவித்துக் கொள்வதோடு, தேர்தல் தோல்வி என்பது நிரந்தரமல்ல என்பதை மனதில் கொண்டு தலைவா உங்களின் உண்மை தொண்டர்களாக நாங்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும், பொறுப்பேற்று கொள்கிறோம் தேர்தல் வெற்றி வாய்ப்பை இழந்தோமே தவிர தாங்கள் தலைமையை என்றும் இழந்ததில்லை, இழக்கவும் மாட்டோம் எனவே கழகத் தோழர்களே தியாகம் மறவர்களே கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் அணி வகுப்போம்! மீண்டும் தமிழ்நாட்டை வென்றெடுப்போம்! சமதர்மம் தழைக்க, சமத்துவ சமுதாயம் படைக்க நாம் அனைவரும் அணி திரள்வோம் என்றும், 2026 சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் 59 இடங்களில் வெற்றி பெற்று பிரதான எதிர்க்கட்சியாக சட்டமன்றத்தில் பணியாற்றி வருகிறது சட்டமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி தலைவராக எழுச்சி நாயகன் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அறிவித்த கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட திமுக செயற்குழு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றி வரும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும்

2026 சட்டமன்ற தேர்தலில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பூம்புகார், சீர்காழி, மயிலாடுதுறை ஆகிய மூன்று தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற இரவு, பகல் பாராமல் உழைத்திட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகி களுக்கும்,சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்களுக்கும், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்தல் பணிக்குழு நிர்வாகிகளுக்கும், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் கழக சார்பு அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும், தோழர்களுக்கும் மயிலாடுதுறை மாவட்ட செயற்குழு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு வெற்றி வாகை சூடிய பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் ஆர். செந்தில் செல்வன் ஆகியோருக்கு மயிலாடுதுறை மாவட்டச் செயற்குழு வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும்

சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பு இழந்த காரணத்தை ஆய்வு செய்ய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் நியமித்துள்ள ஆய்வு குழுவிற்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், கழக நிர்வாகிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுப்பது என்றும

ஜூன் 3ஆம் தேதி தமிழ்நாட்டின் நவீன சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட முழுவதும் இரு வண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், ம/ முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடத்தியும், இரத்ததான மற்றும் மருத்துவ முகாம் நடத்தியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை எழுச்சியுடன் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் கொண்டாடுவது என்றும் பிறந்தநாள் விழா ஏற்பாடுகளை ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்களை செய்து தர வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



புதுக்கோட்டை கறம்பக்குடி அருகே, மாற்றுத்திறனாளி பெண் கடத்திச் செல்லப்பட்டு கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், மாவட்ட கழக செயலாளர், வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் அவரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, அவரது உடல்நிலை குறித்து தலைமை மருத்துவரிடம் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் துணை மேயர் எம்.லியாகத் அலி, எஸ்.எஸ்.கருப்பையா . தவ.பாஞ்சாலன், ஆர்.ஆர்.சாமிநாதன், வே.ராஜேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை இரா. லோகநாதன்

### மே 21 (2015)



இளமை பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்ட நகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.


**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் இரா. கோவிந்தசாமி

### மே 21 (1995)



கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே உறுப்பினராகி, சாலவாக்கம் கிளைச் செயலாளராகி பணியாற்றி வந்ததுடன், அருகில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கழகக் கொள்கைகளை விளக்கி நாடகங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து வந்தவர். தலைமைக் கழக பேச்சாளராக திகழ்ந்தவர்.

அறிஞர் அண்ணாவின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட இவர், உத்திரமேரூரில் 1965ல் தனது தலைமையில் மொழிப் போராட்டத்தை நடத்தி, ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றவர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவல் துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**